## ✠ யாருக்கும் எதுவும் சொந்தமில்லை

மாடு, கன்று, செல்வமும், மனைவி மைந்தர்

மாட மாளிகைப்புறத்தில் வாழுகின்ற நாளிலே

ஓடிவந்த காலதூதர் சடுதியாக மோதவே

உடல் கிடந்த உயிர் கழன்ற உண்மைகண்டும் உணர்சிலீர்

**இதன் விளக்கம்:**

மாட மாளிகைகள் கட்டி, மாடு, கன்று போன்ற சகல செல்வங்களையும் சம்பாதித்து தம் மனைவி, மக்களோடு மகிழ்ச்சியாக வாழ்ந்து வரும் நாட்களில், திடீரென்று விபத்தில் நடப்பது போல் எமத் தூதர்கள் ஒரு நொடியில் உயிரைக் கொண்டு போன பின்பு,

அவ்வுடல் பிணமாகக் கிடப்பதை கண்டுமம், உயிர் போனதை உணர்ந்தும், அவ்வுடலில் உயிராய் நின்ற ஈசன் ஆட்டுவித்த உண்மையை உணர்ந்து இரவா நிலைபெற்று இறைவனை சேர தியானம் செய்யுங்கள் என்று கூறுகிறார்கள்.

✠ இந்தப் பாடல் வரிகள் மூலம் இவ்வுலகில் யாருக்கும் எதுவும் சொந்தமில்லை என்பதை உணர வேண்டும். இவ்வுலகில் எதுவும் யாருக்கும் சொந்தமில்லை? நமக்கு நாமே சொந்தமில்லாத போது பிற பொருட்கள் நமக்கு எவ்வாறு சொந்தமாக முடியும்? இவ்வுண்மையை உணராத மனிதன் ஆணவ மிகுதியால் தன்னிலும் வலிமைகுறைந்த சக மனிதரை அடக்கி ஆளும் எண்ணம் கொண்டு பொருளாதார ஏற்றத் தாழ்வை உருவாக்கி பொருளற்ற ஏழை எளியோரைப் பிறர் செய்யத் தயங்கும் துப்புரவு முதலிய பணிகளை செய்ய வைத்து நாளடைவில் தீண்டாமை எனும் பேயை உருவாக்குகின்றான். இதனை மனிதர் குலத்துக்கு உணர்த்தி, சமதர்மம் சமுதாயத்தை உருவாக்கும் சேவை மனப்பான்மை கொண்ட பல ஞானிகள் தங்களது அறிவாலும், அனுபவத்தாலும் கண்டறிந்த தத்துவமே இறை தத்துவம்.